மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை:- திருமதி.**N.**ரேணுகா**.,** பி.ஏ., பி.எல்

மாவட்ட உரிமையியல் நீதிபதி

சூலூர்

2024 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 19 ம் நாள் செவ்வாய்கிழமை

வழக்கிடை விண்ணப்ப எண்.7/2024

அசல் வழக்கு எண்**.126/2019**

1. தியாகராஜன்,
2. கணபதி கவுண்டர்,
3. லோகநாயகி,
4. சின்னம்மாள் ...மனுதாரர்கள்/வாதிகள்

/ Vs /

அர்ஜுனன் ...எதிர்மனுதாரர் / 1 ம் பிரதிவாதி

இந்த மனுவானது 10.09.2024 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பிரபாகரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மகேசன், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

மனுதாரர்களை இ.ம.எண்.3/2020 ல் நீதிமன்ற ஆணையர் மேற்கொண்ட தல விசாரணை தொடர்பாகவும், அறிக்கை தொடர்பாகவும் நீதிமன்ற ஆணையரை நீதிமன்றத்தில் விசாரணை செய்ய அனுமதித்து உத்திரவிடுமாறு மனுதாரரால் கட்டளை 26 விதி 10ன் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1).** <u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>**:**

1.1. இ.ம.எண்.3/2020 ல் நீதிமன்ற ஆணையர் 14.03.2024 அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இதில் பிரதிவாதியின் பூமியில் வருவாய் துறையினரின் புலக்கற்கள் ஏதுமில்லை. பிரதிவாதியின் மேற்கு எல்லையில்

அளவு காணப்படாத சொத்துக்களை தன்னுடைய சொத்துக்களே இல்லை என்று பிரதிவாதியே தெரிவிக்கின்ற சூழ்நிலையில் இரண்டு புலங்களுக்கு இடையே உள்ள அளவு வித்தியாசத்தினை சட்டப்படி மாவட்ட பதிவிதழில் அறிவிப்புச் செய்து அளக்க வேண்டும். புலக்கற்களை பராமரிக்க வேண்டிய வேலை பிரதிவாதியைச் சேர்ந்தது, வேண்டுமென்றே புலக்கற்களை பிரதிவாதி தகர்த்துவிட்டார்.

1.2. நீதிமன்ற ஆணையருக்கு உதவியாக வந்த தாலுக்கா சர்வேயரும் புலக்கற்கள் இல்லாமல் பிழைகளுடன் வரைபடம் தயாரித்து கொடுத்துள்ளார். நீதிமன்ற ஆணையர் தவறான தகவல்களுடனும் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பின் அனுபவத்தினைக் காட்டும் முக்கியத் தகவல்களை மறைத்தும் ஒருதலைப்பட்சமாக செயல்பட்டுள்ளார். எனவே நீதிமன்ற ஆணையரை விசாரிப்பது வழக்கிற்கு அவசியமானதாக இருக்கின்றது, எனவே மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2.** <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**:-**

2.1. மனுதாரர்கள் இ.ம.எண்.3/2020-ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு எவ்வித ஆட்சேபனைகளும் தெரிவிக்காத வண்ணம் தற்போது மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையரை விசாரிக்க வேண்டி அனுமதி கோரி மனுதாக்கல் செய்திருப்பது சட்டப்படிக்கு நிலைக்கத்தக்கதல்ல.

2.2. பிரதிவாதியின் பூமியில் உள்ள கற்கள் இருந்தால் மனுதாரர்கள்/வாதிகள் செய்துள்ள ஆக்கிரமிப்பு தல விசாரணையின் போது தெரிந்துவிடும் என்பதால் மனுதாரர்கள்/வாதிகளே அளவு கற்களை பிடுங்கி விட்டனர் என மேற்படி எதிர்மனுதாரர் தெரிவிக்கிறார். சர்வேயர் அவரது வரைபடத்திலேயே பிரதிவாதி பூமியின் மேற்கு எல்லை எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது என்று தெளிவாக குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

2.3. எதிர்மனுதாரர் பூமியின் மேற்கு எல்லை எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது என்று தெளிவாக குறிப்பிட்டுள்ள சமயத்தில் நீதிமன்ற ஆணையரை விசாரணை செய்வது அவசியமற்றது ஆகும். மனு தள்ளுபடி

செய்யப்பட வேண்டும்.

**3).** பிரச்சனை**:**

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 10 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**4).** பிரச்சனைக்குத் தீர்வு**:**

4.1. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் பிரதிவாதி தாக்கல் செய்த மனுவின் பெயரில் சொத்தை அளவீடு செய்ய அனுமதிக்கப்பட்டு அதன் கீழ் நீதிமன்ற ஆணையரும் சர்வேயர் உதவியுடன் சொத்தை பார்வையிட்டு அளந்து கடந்த 14.03.2024 ல் அறிக்கை தாக்கல் செய்தும், அதே தேதியில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர், சர்வேயர் சரியான புல கற்கள் வைத்து வழக்கு சொத்தை அளவீடு செய்யவில்லை என்று ஆட்சேபனையும் தாக்கல் செய்தார். அதற்கு நீதிமன்ற ஆணையர் தரப்பில் முறையாகத்தான் வழக்கு சொத்து அளவீடு செய்யப்பட்டது என்று பதில் ஆட்சேபனையும் அன்றைய தேதியிலேயே தெரிவிக்கப்பட்டது. அதன்பின்பு இடைக்கால மனு எண்.3/2020 அன்றைய தேதியிலேயே முடித்துவைக்கப்பட்டது. அதன்பின்னிட்டு மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையரை விசாரணை செய்து அறிக்கையின் உண்மையை தன்மையை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

4.2. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை பொருத்து மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்படும் பொழுது அந்த ஆட்சேபணை பொருத்த சங்கதிகளை முழுமையாக விசாரணை செய்துதான் நீதிமன்றம் இவ்வழக்கில் முடிவு செய்ய முடியும். எனவே இம்மனுவில் நீதிமன்ற ஆணையரை விசாரித்தால் எவ்வாறு அளவீடு செய்யப்பட்டது அதில் எதுவும் குறைகள் உள்ளதா என்பது பொருத்து சந்தேகங்கள் தெளிவாகிவிடும். மேற்கொண்டு இந்த

வழக்கை தொடர்ந்து நடத்தி இருதரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனைக்கு இறுதி முடிவிற்கு வர உதவியாக இருக்கும் என்பதால் நீதியின் நலன் கருதி இந்த மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இறுதியாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/N.Renuga

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சூலூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>

இல்லை.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>

இல்லை.

Sd/N.Renuga

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சூலூர்.

Draft/ Fair Order
I.A.No.7/2024 in
O.S.No.126/2019
Dated : 19.11.2024
DMC, Sulur